செ.வெ.எண். 20/டிசம்பர் தேதி : 16.12.2016

# <u>தருமபுரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு மற்றும் அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் கண் சிகிச்சை பிரிவில் சிறப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!</u>




தருமபுரி மாவட்டத்தி கண் புரை பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு அவர்களின் இருப்பிடம் அருகிலேயே அம்மா திட்ட சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வாகனத்தில் அழைத்துச் சென்று தரம் மிக்க உபகரணங்களினால் பரிசோதனை செய்து தேவையான அறுவை சிகிச்சை செய்யப்பட்டு மருந்துகள் மற்றும் கண் கண்ணாடி அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு தேவையான மருத்துவம் மற்றும் அறிவுரைகள் கூறப்படுகிறது. கண் அழுத்த நோய் உள்ளவர்களுக்கு ஆரம்ப கட்டத்திலேயே தரம் வாய்ந்த கருவிகளால் நோய் கண்டுப்பிடிக்கப்பட்டு சிகிச்சை இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது. சர்க்கரை மற்றும் இரத்த கொதிப்பு நோய்களால் பாதிக்கப்பட்ட பெரியவர்களுக்கு கண் நரம்பில் ஏற்படும் நோய்கள் சிறந்த கருவிகளால் அறியப்பட்டு தேவையான மருந்துகள் மற்றும் லேசர் சிகிச்சை மூலமாக சிறப்பாக கண் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் கருவிழி வெள்ளை படாதவர்களுக்கு தானம் பெறப்பட்ட கருவிழியால் அறுவை சிகிச்சையால் மாற்றி அமைக்கப்பட்டு பார்வை கொடுக்கப்படுகிறது. இம்மருத்துவமனையில் பாதுகாப்பான சூழ்நிலை, சுகாதார குடிநீர் மற்றும் வெந்நீர் வழங்கப்படுகிறது. இந்த வசதிகள் அனைத்தையும் பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.

**<u>தருமபுரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு மற்றும் அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் கண் சிகிச்சை பிரிவில் சிறப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது</u>**